சித்தையன்கோட்டைபேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

ஆணையிடுபவர் : திருமதி.ப.ஜெயமாலு.,

ந.க. எண் : 61/2024 **நாள் : 27.11.2024.**

பொருள் : மனைப்பிரிவு அங்கீகரித்தல் – திண்டுக்கல் மாவட்டம் – சித்தையன்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி – பாளையங்கோட்டை கிராமம் – சர்வே எண்.279/2, 279/3A (1.79 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 37 மனைபிரிவுகளுக்கான– தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண். BRIOXFJH/2023/TCP, நாள்.22.07.2023
2. துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட அனுமதி எண்.SWP/DTCP/ DINDIGUL/Layout No:139/2023
3. துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண். 999/2024/தி.மா.3, நாள்.08.03.204
4. ஆத்தூர் சார்பதிவக சீர்திருத்த பத்திர பதிவு எண்.567/2024, நாள்.25.03.2024
5. சித்தையன்கோட்டை பேரூராட்சி மன்றத் தீர்மான எண். 79, நாள். 22.11.2024
6. தொடர்புடைய ஆவணங்கள்

உத்திரவு:

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சி பாளையங்கோட்டை கிராமம் 279/2, 279/3A (1.79 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கொண்ட இடத்தில் பார்வை 1,2 மற்றும் 3ல் காணும் துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் கடிதத்தில் 37 மனைகளுக்கு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் பார்வை–4ல் கண்ட பத்திரங்களின் படி சாலைகள் , பொது இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்வை–1ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சாலை வசதி, வடிகால் வசதி, குடிநீர் வசதி (பைப் லைன்) மற்றும் தெருவிளக்கு வசதி (மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது) ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்வை–5ல் கண்ட இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.79 நாள்.22.11.2024ன் படி இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அங்கீகரித்துள்ளது. எனவே உள்ளாட்சி அமைப்புக்கு தானமாக ஒப்படைப்பு செய்து, மனைப்பிரிவு சாலையினை தார்ச்சாலை (Block Topping) தன்மை கொண்டு அமைத்தும், சாலைகளின் ஓரங்களில் நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கும், அகலத்திற்கும் ஏற்ப அமைக்கப்பட்டதின் அடிப்படையிலும், மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த தெரிவிக்கப்பட்ட கட்டணத் தொகைகளை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதையும் ஏற்று, பார்வை–1,2 மற்றும் 3ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேற்கண்ட புல எண்ணில் அமைந்துள்ள 37 மனைகளுக்கும் மனைப்பிரிவு அங்கீகரித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் மனைபிரிவு தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்ட (BRIOXFJH/2023/TCP, நாள்.22.07.2023, SWP/DTCP/ DINDIGUL/Layout No:139/2023 மற்றும் 999/2024/தி.மா.3, நாள்.08.03.204)ல் குறிப்பிடப்பட்ட சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2) பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைகள் , மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் பொது திறவிடங்களில் உள்ள இடத்தினை மனைகளாக பிரித்து ஏதும் விற்பனை செய்யக் கூடாது.

.....2

3) இவ்வுத்திரவுடன் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட 37 மனைகளுக்கான வரைபட ஒப்புதல் நகல் உரிய அனுமதி வழங்கி இணைத்து அனுப்பப்படுகிறது.
4) வரன்முறைபடுத்தப்பட்ட 37 மனைகளை பிரித்து விற்கக் கூடாது
5) தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும்பட்சத்திலோ, ஆவணங்கள் ஏதும் சட்டத்திற்கு புறம்பானது என கண்டறியப்பட்டாலும், இவ்வுத்திரவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கடைபிடிக்க தவறினாலோ தங்களுக்கு வழங்கப்பட்ட இவ்வுத்திரவு எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர், 27/11/24
சித்தையன்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.

இணைப்பு :

- வரைபடம்.

பெறுநர் :

- திரு.கா.அப்துல்ரஹ்மான் த/பெ.காஜாமைதீன், 65/32, பள்ளப்பட்டி, நரிப்பாறை, திண்டுக்கல்
- திரு.நை.ஷேக் தாவூது த/பெ.நைனா முகமது, RMTC காலனி, திருவள்ளுவர் தெரு, திண்டுக்கல்
- திரு.ரா.பிரேம் நஷிர் த/பெ. ராஜா முகமதுகனி, ராஜலெட்சுமி நகர், பொன்னகரம், திண்டுக்கல்

நகல் :

- துணை இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், க.எண்.14, விவேகானந்தா நகர், திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
- திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- சார்பதிவாளர், ஆத்தூர் சார்பதிவகம்.
- இருப்பு கோப்பிற்கு.